**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
*கோயம்புத்தூர் - 641 003*

*முனைவர். மா. ராஜவேல், Ph.D.*
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: 94890 56730*

*தொலைபேசி: 0422 - 6611302*
*நிகரி: 0422 - 2431821*
*மின்னஞ்சல்:pro@tnau.ac.in*

---

*பெறுநர்,* *தேதி:22.12.2023*
*ஆசிரியர்,*
*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் நிறுவனமான எஸ். கே. எஸ். அக்ரோ இண்டஸ்டிரீஸ், தஞ்சாவூர்இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் நிறுவனமான எஸ். கே. எஸ். அக்ரோ இண்டஸ்டிரீஸ், அக்கரைவட்டம், தஞ்சாவூர் தாலுக்கா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 21.12.2023 அன்று கோவையில் கையெழுத்தானது. இந்த நிறுவனமானது தேங்காயின் மேலோட்டை தூளாக்கி விற்பனை செய்யும் ஒரு நிறுவனமாகும். தோட்டக்கலைப் பயிர்களில் இந்த தூளை இயற்கை உரமாகப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும்.

வேளாண்மை சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்படுவது, தொழில்நுட்பம் சார்ந்த தகவல் பரிமாற்றம், தேங்காய் ஓட்டுத்தூள் பற்றிய ஆராய்ச்சியில் புதுமையைக் கண்டுபிடித்தல், செயல்திறனைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் கண்டுபிடிப்பை விவசாயிகள், பண்ணை மகளிர், சுய உதவிக்குழுக்கள் போன்றோருக்கு பயிற்சி மூலம் கொண்டு செல்லுதல் போன்றவை இந்த ஒப்பந்தத்தின் இதர முக்கிய நோக்கங்களாகும்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி இந்த ஒப்பந்தம் உருவாக பெரிதும் துணை நின்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் இரா. தமிழ்வேந்தன் மற்றும் எஸ். கே. எஸ். அக்ரோ இண்டஸ்டிரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி காயத்ரி சுரேஷ்குமார் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பெ. ஐரின் வேதமணி அவர்கள் இந்த ஒப்பந்தம் உருவாக அடித்தளமிட்டு செயல்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில், ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகளைப் பற்றி இவர்கள் விளக்கினார்கள்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நறுமணப் பயிர்கள் மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் துறையின் தோட்டக்கலைப் பேராசிரியர் முனைவர் க.வி. ராஜலிங்கம்

மற்றும் எஸ். கே. எஸ். அக்ரோ இண்டஸ்டிரீஸ் நிறுவனத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. கு. சுரேஷ்குமார் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***